EASTERN UNIVERSITY

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலை கலாசார பீடம்
## நான்காம் வருட முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு
## 2013 / 2014 (June 2017)

# OCR 2263 Good Governance and Team Work

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி **I** இல் இருந்து ஏதேனும் இரு வினாக்களுக்கும் பகுதி **II** இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி I

01. (அ). 'ஆளுகை' (Governance) என்பதற்கான வரைவிலக்கணத்தைக் குறிப்பிட்டு 'நல்லாளுகை' (Good Governance), 'தீயாளுகை' (Bad Governance) ஆகிய சிந்தனைகள் பற்றிய கருத்துக்களைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(ஆ). நல்லாளுகைக்குரிய பண்புகளில் இரண்டினைத் தெரிந்து அவற்றினை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

02. (அ). குழு (Team) என்பதற்கான வரைவிலக்கணத்தினைத் தருக.

(5 புள்ளிகள்)

(ஆ). குழு அபிவிருத்திப் படிமுறைகள் நான்கினையும் உரிய ஒழுங்கின்படி விளக்குக.

(15 புள்ளிகள்)

03. (அ). தீர்மானம் எடுத்தல் தொடர்பான குழுக்கலந்துரையாடல் ஒன்றின்போது வெளிப்படுகின்ற திறன்கள் ஐந்தினையும் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ). மேற்படி கலந்துரையாடலில் இணக்கப்பாட்டாளர் (Negotiator) வகிக்கும் பங்கு எத்தகையதென ஆராய்க.

(10 புள்ளிகள்)

# பகுதி II

04. மகாபாரதமானது எவ்வகையில் நல்லாளுகைப் பண்புகளை அனுசரித்துச் செல்கின்றது என்பதனைத் தகுந்த எடுத்துக்காட்டுக்களுடன் முன்வைக்குக.

(20 புள்ளிகள்)

05. "இயேசுகிறிஸ்து அவர்கள் சிறந்த இணக்கப்பாட்டாளராகத் (Negotiator) திகழ்ந்துள்ளார்." என்ற கூற்றின் பொருத்தபாட்டினை தகுந்த ஆதாரங்களுடன் நிறுவுக.

(20 புள்ளிகள்)

06. திருக்குர்ஆனினூடாக வெளிப்படுத்தப்படும் நல்லாளுகைப் பண்புகளை தகுந்த எடுத்துக்காட்டுக்களின் வாயிலாக முன்வைக்குக.

(20 புள்ளிகள்)

07. "இணக்கப்பாட்டாளருக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் மகாத்மா காந்தி ஆவார்." என்ற கூற்றுக்கு ஆதரவாக உமது கருத்துக்களைத் தருக.

(20 புள்ளிகள்)